# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை -2016

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுக்காவுக்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 32 ஆண்டுகளாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஊனமுற்றோர் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2016-ம் ஆண்டு செய்து முடித்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

**திட்டத்தின் நோக்கம்:**

ஊனமுற்ற பிள்ளைகளின் நலனில் அக்கரைக் கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிப்படைவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி அவர்களும் சமுதாய மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1. மேற்கொண்ட திட்டங்கள்:**

1. மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம்.
2. ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி – புளியடி, நாகர்கோவில். (மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம்.
3. நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் (பெண்கள்).
4. முடநீக்கு மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டம்.
5. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொண்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. ஊனமுற்றோர், ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களை சந்தித்தல்.
2. ஊனமுற்றோர் புள்ளி விபரம் சேகரித்தல்.
3. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்.
4. சிறப்பு பயிற்சி கொடுத்தல்
5. பணியாளர் கூட்டம் நடத்துதல்
6. பணிமதிப்பீடு கூட்டம் நடத்துதல்
7. விழாக்கள் கொண்டாடுதல்
8. நன்கொடை வசூலித்தல்
9. ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்
10. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச் செல்லுதல்
11. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்
12. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்
13. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்
14. மருத்துவ முகாம் நடத்துதல்
15. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி பெற, பயிற்சி கொடுக்க செல்லுதல்
16. விடுதி பிள்ளைகள் முதியோர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
17. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல்.

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், ஒருங்கிணைப்பாளர்கள், உதவி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 4. செய்து முடித்த பணிகள்:

### 1. ஊனமுற்றோர் மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளின் பெற்றோர்களை சந்தித்தல்.

உடல் ஊனமுற்ற பிள்ளைகளையும், மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளையும் வீடுகளில் சென்று சந்தித்து பேசி அவர்களின் குடும்ப சூழ்நிலையை அறிந்து அதற்கு ஏற்றபடி சிறப்பு பயிற்சி கொடுக்கவும், வீட்டில் தனியாக இருப்பதை தவிர்த்து சிறப்பு பள்ளிக்கு அனுப்புவதின் அவசியம் பற்றியும், சிறப்பு பள்ளியில் கொடுக்கப்படும் பயிற்சியினை வீட்டிலும்



Scanned with CamScanner

கொடுக்கவும், வீட்டில் பிள்ளைகளை பராமரிக்கும் விதம் பற்றி எடுத்து கூறவும் வேண்டி ஒவ்வொரு பெற்றோரையும் வீடு வீடாகச்சென்று சந்தித்து பேசப்பட்டது.

இந்த ஆண்டு நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட 417 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது.

தோவாளை வட்டாரம் மற்றும் பிற வட்டாரங்களுக்குட்பட்ட 136 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து பேசப்பட்டுள்ளது. பணியாளர்கள் மூலம் 184 பிள்ளைகளையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்துப் பேசப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடம் | சந்தித்த ஊனமுற்றவர்கள் | சந்தித்த பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் பகுதி | 417 | 417 |
| 2 | தோவாளை வட்டாரம் மற்றும் பிற பகுதிகள் | 136 | 136 |
| 3 | பணியாளர்கள் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் | 184 | 184 |
| **மொத்தம்** | | **737** | **737** |

**2. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்:**

மூளைவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் நடத்தை குறைபாடுகளை அறிந்து அவர்களுக்கு தேவையான சிறப்புப் பாடங்களை திட்டமிடவும் அதற்கு ஏற்ப பயிற்சிகள் கொடுக்கவும், பள்ளியில் கொடுக்கப்பட்ட பயிற்சிகளை வீட்டிலும் செய்ய வைக்க வேண்டியும் பெற்றோர்களின் ஆலோசனையை கேட்கவும் வேண்டி பெற்றோர் சங்க கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பள்ளியில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றது. இதில் 43 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

“ஸ்பாஸ்டி” தொழிற்பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு 2 பெற்றோர் சங்க கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் 46 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.



Scanned with CamScanner

| வ. எண் | சிறப்பு பள்ளியின் பெயர் | நடைபெற்ற பெற்றோர் சங்க கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | "ஸ்பாஸ்டி" - புளியடி | 2 | 46 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் தங்கும் விடுதி, திருப்பதிசாரம் | 2 | 43 |
| மொத்தம் | | 4 | 89 |

3. **சிறப்பு பயிற்சி கொடுத்தல்:**

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், தன்னுடைய அன்றாட தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ளவும் அவர்களும் சமுதாயத்தோடு இணைந்து வாழ வழி வகை செய்யும் நோக்கத்துடன் சிறப்பு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி தொழிற்பயிற்சி மையத்தில் 52 பிள்ளைகளுக்கு சிறப்பு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோருக்கான தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பள்ளியில் 36 பிள்ளைகளுக்கு சிறப்பு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | சிறப்புப் பள்ளியின் பெயர் | சிறப்பு பயிற்சி பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | "தி ஸ்பாஸ்டி" சிறப்பு பள்ளி – புளியடி | 52 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பள்ளி - திருப்பதிசாரம் | 36 |
| மொத்தம் | | 88 |

4. **பணியாளர் கூட்டம் நடத்துதல்:**

பணியாளர்கள் பணிகளை திட்டமிட்டு செய்வதற்கும் செய்த பணிகளை திருப்பிப் பார்ப்பதற்கும் பணியில் உள்ள நிறைகுறைகளை அறிந்து குறைகளை நிவர்த்தி செய்து பணிகளை செவ்வனே செய்ய வேண்டியும் பணியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற பணியாளர்கள் கூட்டம் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

இந்த ஆண்டு "ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையத்தில் 12 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரத்தில் 12 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நிர்வாக பணியாளர்களுக்கு 42 பணியாளர் கூட்டம் நடைபெற்றுள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளத்தில் இந்த ஆண்டு 12 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டம் |
|---|---|---|
| 1 | "ஸ்பாஸ்டி"- புளியடி | 12 |
| 2 | மனவளர்ச்சிகுன்றியோருக்கான சிறப்பு பள்ளி –திருப்பதிசாரம். | 12 |
| 3 | நிர்வாக பணியாளர் கூட்டம் | 42 |
| 4. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் | 12 |
| | மொத்தம் | **76** |

**5. பணி மதிப்பீடு நடத்துதல்:**

ஒவ்வொரு மாதமும் திட்டமிட்ட பணிகளை ஒவ்வொரு திட்டத்தின் கீழும் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைப்பற்றி ஆய்வு செய்யவும் திட்டமிட்ட பணிகளில் செய்து முடிக்காத பணிகளை எவ்வாறு செய்வது என்பதை பற்றி கலந்து ஆலோசிக்கவும் ஒவ்வொரு மாதமும் பணி மதிப்பீடு நடத்தப்பட்டது.

இந்த ஆண்டு ஒவ்வொரு திட்டங்களின் கீழும் எத்தனை பணி மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையத்தில் 12 பணிமதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளியில் 12 பணிமதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் 12 பணி மதிப்பீடு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

நிர்வாக பணியாளர்களுக்கு 12 பணிமதிப்பீடு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நடைபெற்ற பணிமதிப்பீடு |
|---|---|---|
| 1. | தி ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆ.்.ப் கன்னியாகுமரி | 12 |
| 2. | மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி – திருப்பதிசாரம். | 12 |
| 3. | நிர்வாக பணியாளர் பணிமதிப்பீடு கூட்டம் | 12 |
| 4. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் | 12 |
| | மொத்தம் | 48 |

**6. விழாக்கள் கொண்டாடுதல்:**

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் திறன்களையும், திறமைகளையும் வெளிக்கொணரவும் பல்வேறு விழாக்களில் வித்தியாசம் காணவும் வேண்டி விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1. ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆ.்.ப் கன்னியாகுமரி**

26-01-2016 அன்று குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது.

29-05-2016 அன்று தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக திரு. ஜாண்போஸ்கோ, திருமதி. ஆக்னஸ் ஜாக்குலின் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

15-8-2016 அன்று சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக சமத்துவ மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் கலந்து கொண்டு சுதந்திர கொடியேற்றி சிறப்பித்தார்கள்.

24-10-2016 அன்று விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது.

21-12-2016 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2016 | குடியரசு தின விழா |
| 2. | 29-05-2016 | பள்ளி ஆண்டு விழா |
| 2. | 15-08-2016 | சுதந்திர தின விழா |
| 3. | 24-10-2016 | விளையாட்டு விழா |
| 4. | 21-12-2016 | கிறிஸ்மஸ் விழா |



Scanned with CamScanner

## 2. மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி திருப்பதிசாரம்:

26-01-2016 அன்று காலை 9.15 மணிக்கு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளியில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமை தாங்கி குடியரசு தின விழா கொடியேற்றினார்கள்.

24-04-2016 அன்று மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி திருப்பதிசாரத்தில் வைத்து 20-வது பள்ளி ஆண்டு விழா காலை 10.30 மணிக்கு திட்ட இயக்குநர் திரு. பேசில்ராஜன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பஞ்சாயத்து தலைவி மற்றும் உபதலைவர் மற்றும் IOB வங்கி மேலாளர் திரு.ராஸவேலு கார்டு நிறுவன பொருளாளர் திருமதி. ஆக்னஸ் ஜாக்குலின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

15-08-2016 அன்று காலை 10.00 மணிக்கு திட்ட இயக்குநர் திரு. பேசில்ராஜன் அவர்கள் தலைமையில் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி. S. ஸ்ரீதேவி அவர்கள் சுதந்திர தினவிழா கொடியேற்றி வாழ்த்துரை வழங்கினார்கள். மாணவிகளுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டது.

24-09-2016 அன்று காலை திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கீழப்பாவூர் திரு. அ. சண்முகையா, கார்டு நிறுவன உறுப்பினர் திருமதி. ரமணி ராஜ்குமார், திரு. காந்தன் ஆகியோர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

23-12-2016 அன்று மாலை மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளியில் வைத்து திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 26-01-2016 | குடியரசு தின விழா |
| 2. | 24-04-2016 | பள்ளி ஆண்டு விழா |
| 3. | 15-08-2016 | சுதந்திர தின விழா |
| 4. | 24-09-2016 | விளையாட்டு விழா |
| 5. | 23-12-2016 | கிறிஸ்மஸ் விழா |



Scanned with CamScanner

3. நல்ல சமாரியன் முதியோர் இல்லம்- ஆசாரிபள்ளம்.

15-01-2016 அன்று அதிகாலையில் முதியோர் இல்லத்தில் வைத்து முதியோர்களால் பொங்கலிட்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

01-10-2016 அன்று காலை 11.00 மணியளவில் திட்ட இயக்குனர் மற்றும் மேலபெருவிளையைச் சார்ந்த திரு. பெலிக்ஸ் பிரபு அவர்கள் தலைமையில் முதியோர் தினவிழா கொண்டாடப்பட்டது.

02-11-2016 அன்று மாலை 3.00 மணியளவில் திட்ட இயக்குனர் மற்றும் திரு. ஜாண்போஸ்கோ, திருமதி. ஆக்னஸ் ஜாக்குலின் அவர்கள் தலைமையில் முதியோர் இல்ல ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

22.12.2016 அன்று மதியம் Fr. குருசு கார்மல் அவர்கள் தலைமையில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது.

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 15-01-2016 | பொங்கல் விழா |
| 2. | 01-10-2016 | முதியோர் தின விழா |
| 3. | 02-11-2016 | முதியோர் இல்ல ஆண்டு விழா |
| 4. | 22-12-2016 | கிறிஸ்மஸ் விழா |

7. **தொழில் பயிற்சி கொடுத்தல்:**

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் வாழ்க்கைதரத்தை மேம்படுத்தவும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் சிறுசிறு தொழில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

"ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மைய மாணவர்களுக்கு தோட்டம் பராமரித்தல், ஆடு பராமரித்தல், பேப்பர் கவர் ஒட்டுதல் போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி மாணவிகளுக்கு ஆடு பராமரிக்கவும், ஈக்கில் எடுக்கவும், பூமாலை செய்யவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

8. **நன்கொடை வசூலித்தல்:**

**இந்த ஆண்டு நன்கொடை பெற்றதின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

திருப்பதிசாரம் சிறப்பு பள்ளிக்கு இந்த ஆண்டு நன்கொடையாக ரூ. 2,12,368/-பெறப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

ஒரு நேர உணவாக 927 நபர்களும், ஒருநாள் உணவாக 39 நபர்களும் உதவி செய்துள்ளார்கள்.

"தி ஸ்பாஸ்டி" தொழிற் பயிற்சி மையத்திற்கு இந்த ஆண்டு நன்கொடையாக ரூ.2,48,650/- வசூலிக்கப்பட்டுள்ளது. ஒரு நேர உணவாக 641 நபர்களும் ஒருநாள் உணவாக 28 நபர்களும் உதவி செய்துள்ளார்கள்.

இவ்வருடம் நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு நன்கொடையாக ரூ.7,750/- மற்றும் ஒருவேளை உணவாக 74 நபர்களும், இரண்டு வேளை உணவாக 1 நபரும் மூன்றுவேளை உணவாக 2 நபர்களும் உதவி செய்துள்ளார்கள்.

மனவளர்ச்சி குன்றியோருக்கான தங்கும் வசதியுடன் கூடிய சிறப்பு பள்ளியில் தங்கி கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவ வசதிகள் அனைத்தும் உள்ளூர் நன்கொடையாளர்களிடமிருந்து வாங்கி நடத்தப்பட்டு வருகிறது.

**பொருளாக உதவி செய்தவர்கள்**

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளிக்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்.:**

13-01-2016 அன்று வடிவீஸ்வரத்தைச் சேர்ந்த திரு. காத்தபெருமாள் அவர்கள் Old T.V ஒன்றும், 29-01-2016 வாத்தியார்விளை திரு. ஆனந்தபாபு அவர்கள் 10 Tube Light-ம், 29-01-2016 வெள்ளமடம் திரு. ஜவஹர் அவர்கள் 25 கிலோ அரிசியும்,

08-02-2016 அன்று கிருஷ்ணன் கோயில் திரு. C.T. பிள்ளை அவர்கள் 25 கிலோ அரிசியும், 10-02-2016 அன்று திருப்பதிசாரம் திருமதி. பத்மா அவர்கள் பழங்களும், Pant, Shirt 1 Set-ம், 13-02-2016 அன்று புரவசேரி திரு. சுப்பிரமணி வேலன் அவர்கள் 50 கிலோ அரிசியும், 16-02-2016 அன்று தாழக்குடி திருமதி. மணிமாலா அவர்கள் 15 Mug-ம், 21-02-2016 அன்று காட்டுவிளை ஆலயம் வாயிலாக சீனியும், 26-02-2016 அன்று Rotary Club of Nagercoil வாயிலாக 100 கிலோ அரிசியும், 28-02-2016 அன்று ஆசாரிபள்ளம் புனித அந்தோணியார் நற்பணி மன்றம் வாயிலாக துணிசோப், Bathing சோப், Powder ஆகியவையும்,



Scanned with CamScanner

01-03-2016 அன்று திருமதி. அழகம்மாள் (பூதப்பாண்டி) அவர்கள் 50 கிலோ அரிசி, பருப்பு, மளிகை பொருள்களும், 02-03-2016 அன்று திரு. பாலமுருகன் (நாகர்கோவில்) அவர்கள் 25 கிலோ அரிசியும், 03-03-2016 அன்று பணகுடி Holy Family Church வாயிலாக Biscuit, Bucket, Soap, Nighty ஆகியவையும், 04-03-2016 அன்று St. Xavier Church Kottar அன்பிய ஒருங்கிணையம் வாயிலாக அரிசி, Towel-10, Nighty-1 ஆகியவையும், 06-03-2016 அன்று இயேசுவின் திரு இருதய ஆலய பக்த சபை ஒருங்கிணையம் வாயிலாக Bed Spread-5, Oil, Bucket-2, Soap, Towel-7, Surf, Mug-3, Rice, Bed Sheets-3 ஆகியவையும், 08-03-2016 அன்று புனித ஞானம்மாள் பெண்கள் அமைப்பு (வெள்ளியாவிளை) வாயிலாக Nighty-40-ம்.

13-03-2016 அன்று காவல்கிணறு சம்மனசு சிற்றன்பியம் வாயிலாக Cake, 50 கிலோ அரிசியும், 21-03-2016 அன்று ஆரல்வாய்மொழி இரட்சண்ய சேனை ஆலயம் வாயிலாக சாரி -20, வேஷ்டி-1, Pant Shirt Fees ஆகியவையும், 26-03-2016 அன்று புனித மார்டின் தே போரஸ் ஆலயம் வாயிலாக அரிசி, தேங்காய், Nighty ஆகியவையும்,

06-04-2016 சென்னை கல்லூரி பூக்கள் வாயிலாக திருமதி. விஜயலெஷ்மி (வடிவீஸ்வரம்) அவர்கள் 8 கட்டிலும், 14-04-2016 அமராவதிவிளை மரியாயின் சேனை மகிழ்ச்சியின் அரசி பிரசீடியம் வாயிலாக தேங்காயும் தந்து உதவி செய்துள்ளார்கள். 14-04-2016 அன்று Sister திலகா அவர்களின் 25-வது ஆண்டு பணி நிறைவு விழாவினை முன்னிட்டு நமது மாணவிகளுக்கு 29 போர்வையும், 27-04-2016 அன்று திரு. S. ராஜா (கோட்டார்) அவர்கள் சலவை சோப், குளியல் சோப், Harpic, Lizal ஆகியவையும், 28-04-2016 அன்று திரு. H. சுரேஷ் (சுசீந்திரம்) அவர்கள் சலவைசோப், பிஸ்கட் ஆகியவையும், 28-04-2016 அன்று திரு. ராஜேஷ் அவர்கள் பிஸ்கட், 30 கிலோ அரிசியும்,

16-05-2016 திரு. S. சுவாமிநாதன் (பூதபாண்டி) அவர்கள் 100 கிலோ அரிசி, பலசரக்கு சாமான்களும், 30-05-2016 அன்று திரு. சிவாபகவத் (நாகர்கோவில்) அவர்கள் wheel chair, walker ஆகியவையும்,

06-06-16 அன்று திருமதி. மாணிக்கசெல்வி ராமகிருஷ்ணா அப்பாட்மெண்ட் அவர்கள் 25 கிலோ அரிசியும், 1 பாக்கெட் மிட்டாய் ஆகியவையும், 23-06-2016 திரு. சுரேஷ் (சுசீந்திரம்) அவர்கள் குளியல்சோப்-10,



Scanned with CamScanner

துணிசோப் - 10 ஆகியவையும், 29-06-2016 அன்று திரு. ஆதித்தன் (ராணிதோட்டம்) அவர்கள், வாழைக்கன்று, விறகு ஆகியவையும், 30-06-2016 அன்று ஸ்ரீ சாய்பாபா சக்திபீடம் வாயிலாக பிஸ்கட் மற்றும் 10 Power Soap ஆகியவையும்,

03-07-2016 அன்று திரு. R. விஷ்ணுதாஸ் (ஜேம்ஸ்புரம்) அவர்கள் Old Sony TV-ம், 16-07-2016 திரு.V. ஜவஹர் (வெள்ளமடம) அவர்கள் 50 கிலோ அரிசியும், 17-07-2016 அன்று Rev. Fr. ரெக்ஸிலின் அவர்கள் 23 லுங்கியும், 18-07-2016 அன்று செல்வி. மகதி ஐயப்பன் (ஹோட்டல் மணி பவன்) அவர்கள் Nighty, Inners ஆகியவையும், 23-07-2016 திரு. S. ராஜா (குலாலர் தெரு) அவர்கள் பயன்படுத்திய குளிர்சாதன பெட்டி ஒன்றும், 24-07-2016 அன்று Dr. R. சுபிதா ஜோசுவா (கிறிஸ்டோபர் நகர்) அவர்கள் Pillow cover, 25 கிலோ அரிசி, காய்கறி, மளிகை பொருட்களும், 24-07-2016 அன்று திரு. டேவி ஹெர்பர்டு (கிறிஸ்டோபர் நகர்) அவர்கள் 15 Bed sheets, Towels ஆகியவையும், 31-07-2016 அன்று திருமதி. அமுதா (பார்வதிபுரம்) அவர்கள் Nighty-20, Towel-35, Inners, Soap, Oil, Paste, Powder ஆகியவையும்,

02-08-2016 அன்று திருமதி. ஸ்ரீரெங்கம் (ஓட்டுபுரைத்தெரு) அவர்கள் 10 கிலோ அரிசியும், 20-08-2016 அன்று திருமதி. ஜூடி பிரான்சீஸ்(நாக்கால்மடம்) அவர்கள் குளியல் சோப் 40-ம்,

03-09-2016 அன்று திரு. ராம்பல் சிங் (கண்ணனூர்) அவர்கள் Soap, Lotion, Sweet, Mixer ஆகியவையும், திருமதி. ராணி சந்திரா (ஒழுகினசேரி) அவர்கள் Biscuit, Soap, Paste பயன்படுத்திய செயர் -2 ஆகியவையும், 04-09-2016 அன்று அன்னை தெரசா அறக்கட்டளை (ராஜாக்கமங்கலம் துறை) சார்பாக நமது மாணவிகளுக்கு துணி மற்றும் 125 கிலோ அரிசி, மளிகை பொருள்கள் ஆகியவையும், 12-09-2016 அன்று திரு. அலெக்ஸ் (நாஞ்சில் நகர்) அவர்கள் 4 Tube Light Set-ம், 22-09-2016 அன்று திருமதி. அமுதா (கட்டையன் விளை) அவர்கள் 50 கிலோ அரிசி, மளிகை ஜாமான்கள், காய்கறிகள் ஆகியவையும்,

02-10-2016 அன்று திரு. K. சந்தணகுமார் (திருப்பதிசாரம்) அவர்கள் 25 கிலோ அரிசியும், 09-10-2016 அன்று திருமதி. சிபானா (கோட்டார்) அவர்கள் குழுவாக 75 கிலோ அரிசி, சோப்பு, Paste, Oil, Biscuit, Rusk ஆகியவையும்,



Scanned with CamScanner

11-10-2016 அன்று திரு. N. ரவிசந்திரன் அவர்கள் 25கிலோ அரிசி, மளிகை பொருட்கள் ஆகியவையும், 12-10-2016 அன்று திரு. பிரேம் ஆனந்த் (புத்தளம்) அவர்கள் 34 சுடிதாரும், 12-10-2016 அன்று அன்னை மரியாள் அன்பியம் பிலாங்காலை அவர்கள் சோப்பு, Paste, Biscuit, ஆகியவையும்,

17-10-2016 அன்று திரு. V. ரமேஷ்குமார் (அரசமூடு) அவர்கள் 25 கிலோ அரிசியும், 23-10-2016 திரு. வர்க்கீஸ் (பணகுடி) அவர்கள் முருங்கைக்காய், தேங்காய், 25கிலோ அரிசி ஆகியவையும், 25-10-2016 செல்வி. S. சத்தியா (நாகராஜா கோயில் தெரு) அவர்கள் லட்டு, சுடிதார்-1, நைட்டி-3 ஆகியவையும், 28-10-2016 திரு. கிருஷ்ணமூர்த்தி (வஞ்சி மார்த்தாண்டன் தெரு) அவர்கள் 38 சுடிதாரும், இனிப்பு ஆகியவையும், 29-10-2016 அன்று மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சக்திபீடம் வாயிலாக 25கிலோ அரிசி, 3-சாரி, இனிப்பு ஆகியவையும்,30-10-2016 திரு. சிதம்பரம் வ.உ.சி நற்பணி மன்றம் (ஆரல்வாய்மொழி) அவர்கள் இனிப்பு, மிக்சர், பிஸ்கட் ஆகியவையும்,

02-11-2016 அன்று திரு. த. இசக்கியப்பன் (தோவாளை) அவர்கள் 25 கிலோ அரிசியும், 04-11-2016 அன்று திரு. ரமேஷ்குமார் (நாகர்கோவில்) அவர்கள் 25 கிலோ அரிசியும், 16-11-2016 திரு. மணிகண்ட ராஜா அவர்கள் 25 கிலோ அரிசி, காய்கறியும், 17-11-2016 அன்று திரு. வினோத்குமார் (கிருஷ்ணன்கோவில்) அவர்கள் பப்ஸ், கேக், மிட்டாய், ஜூஸ் ஆகியவையும், 18-11-2016 அன்று திருமதி. R.R. சரிகா (திலகர்தெரு) அவர்கள் நைட்டியும், 21-11-2016 திருமதி. ஜெயின் (மீனாட்சிபுரம்) அவர்கள் Nighty-12 சில்வர் வாளி-4, கரண்டி-4, பிளேட்-12, T-Shirt -5-ம், 21-11-2016 அன்று புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் இராஜாக்கமங்கலம் துறை வாயிலாக Nighty-9, சர்க்கரை, அரிசி, சோப்பு ஆகியவையும், 25-11-2016 அன்று ரயில்வே பணியாளர்கள் (கோட்டார்) அவர்கள் மூலமாக குத்துபோணி -11, வட்டை -1, Tea பாத்திரம் -2, கரண்டி -10, அலுமினியபானை பெரியது -1, சிறியது -2, Jug பெரியது -2, சிறியது -2 ஆகியவையும், 26-11-2016 அன்று திரு. நாகராஜன் (தோவாளை) அவர்கள் 5 Tube Light-ம், 29-11-2016 திரு. S. முருகேசன் (வெள்ளமடம்) அவர்கள் Nighty-42-ம்,

10-12-2016 அன்று அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவிகள் Tubelight, Mug, Washing Soap, Paste ஆகியவையும்,



Scanned with CamScanner

12-12-2016 அன்று ரயில்வே Checking Staff இணைந்து Beuro-1, Pillow -10, Plastic Chair -5 ஆகியவையும், 18-12-2016 அன்று திருமதி. ராஜேஸ்வரி (நாகர்கோவில்) அவர்கள் 25 கிலோ அரிசி, பருப்பு, மிக்சர் ஆகியவையும், 22-12-2016 அன்று Department of English Holy Cross Student Plastic Chair, Cake, சீப்பு ஆகியவையும், 23-12-2016 அன்று St. Ann's Met.Hr. Sec. School (Panagudi) ஆசிரியர்கள் வாயிலாக Soap, Paste, Brush, Surf, Powder ஆகியவையும், 24-12-2016 அன்று திரு. ஆன்றணி முத்துகுமார் 4-வது அன்னை தெரசா அன்பியம் வாயிலாக தோசைக்கல், அலுமினிய வாளி-4, Tube Light ஆகியவையும், 25-12-2016 அன்று திரு. சீனு (பூதப்பாண்டி) அவர்கள் 25 கிலோ அரிசி, மளிகை ஜாமான்கள் ஆகியவையும், 26-12-2016 அன்று திரு. பால்தாஸ் (வெள்ளமடம்) அவர்கள் 2 Plastic Chair-ம் வாங்கி தந்து உதவிசெய்துள்ளார்கள்.

மேலும் பலர் அரிசி, மளிகை பொருள்கள், காய்கறிகள், பழங்கள், சோப்பு, எண்ணெய், பவுடர், தின்பண்டங்கள், இனிப்புகள், ~~பழங்கள்~~, போன்ற பொருள்களும், மாதந்தோறும் Dr. சுப்பிரமணியம் (பாரதி கிளினிக்) அவர்கள் கோதுமை மாவு, கோதுமை ரவையும், கிருஷ்ணன் கோயிலைச் சார்ந்த திரு. முருகேசன் அவர்கள் உழுந்து, பயறு ஆகியவையும், திரு. ராஜா (குலாலர் தெரு) மகாலிங்க சேவா சங்கம் சார்பாக அவல், பழம் ஆகியவையும் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள்.

**'ஸ்பாஸ்டி' தொழிற் பயிற்சி மையத்திற்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:**

01.01.2016 அன்று நாகர்கோவில் அசிசிசர்ச் சார்பில் bucket-6, soap, brush, paste, silver plate-50, silver cup-50 pillow cover-3, pillow-17, bedsheet-50, towel-70, bedcover-9, tubelight set-7, ஆகியவைகள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

01.01.2016 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் பழங்கள் சால்வை கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

14.04.2016 அன்று Sr. திலகா அவர்கள் 47 பெட்சீட் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 15.04.2016 அன்று Fr. ஸ்டீபன் ஹென்றி Commission of BCC, Bishop house அவர்கள் அரிசி சாதனங்கள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.



Scanned with CamScanner

06.05.2016 அன்று Fr. Jeramias அவர்கள் கழிவறை கட்டி தந்து உதவி செய்துள்ளார்கள். 10.05.2016 அன்று Mr. Albert Berkmans அவர்கள் 150 சில்வர் தட்டு கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 28.05.2016 அன்று பொழிக்கரை மரியாயின் சேனை சார்பில் அரிசி தேங்காய் சோப்பு துணிகள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

03.07.2016 அன்று திரு. முகமது ஜாபித் அன்சார் அவர்கள் 50 செட் நிக்கர் T-சர்ட் தந்து உதவி செய்துள்ளார்கள்.

15.08.2016 அன்று சைமன் நகர் நேதாஜி இளைஞர் சங்கம் சார்பில் சுடிதார் தந்து உதவி செய்துள்ளார்கள். 15.08.2016 அன்று ராமன்புதூர் சமூகசேவை நற்பணி மன்றம் சார்பில் பெட்சீட்-7, பெட்கவர்-7 தந்து உதவி செய்துள்ளார்கள். 10.08.2016 அன்று திருமதி. பிரேமா அவர்கள் நைட்டி, சிம்மிஸ், சுடிதார், டவ்வல் பாவாடை, பாடி தந்து உதவி செய்துள்ளார்கள். 25.08.2016 அன்று பூத்துறை திருமுழுக்கு யோவான் சர்ச் மரியாயின் சேனை சார்பில் சோப், எண்ணெய், பேஸ்ட், பிரஸ் மற்றும் இனிப்புகள் தந்து உதவி செய்துள்ளார்கள்.

04.09.2016 அன்று அன்னை தெரேசா அறக்கட்டளை (ராஜாக்கமங்கலம் துறை) சார்பில் சில்வர் குத்துபோனி, அலுமினிய வாளி, ஜக், மக், குக்கர், அரிசி, மளிகை, சோப், பிரஸ், பேஸ்ட், ஆடைகள் தந்து உதவி செய்துள்ளார்கள்.

22.10.2016 அன்று குமரி மெட்ரிகுலேசன் பள்ளி (கோட்டார்) சார்பில் அரிசி, மளிகை, சோப், பிரஸ், பேஸ்ட், பென், பென்சில், ஸ்கேல் மற்றும் இனிப்புகள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 29.10.2016 அன்று ஆதி பராசக்தி சித்தர் பீடம் (கிருஷ்ணன் கோவில்) சார்பில் ஒரு பை அரிசி, 10 சர்ட் துணி, சேலை-1 தந்து உதவி செய்துள்ளார்கள்.

7.11.2016 அன்று திரு. பசுமை சாகுல் அவர்கள் T-சர்ட், நிக்கர், டவ்வல் தந்து உதவி செய்துள்ளார்கள். 11.11.2016 அன்று திருமதி. சார்லஸ் அகிலா (பிள்ளை தோப்பு) அவர்கள் சார்பில் சலவை சோப், குளியல் சோப், லோசன் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 26.11.2016 அன்று புதுகுடியிருப்பு குழந்தை ஏசு அன்பிய இறைமக்கள் சார்பில் சோப், பேஸ்ட், லோசன், டவ்வல், டெட்டால் மற்றும் பிஸ்கட் தந்து உதவி செய்துள்ளார்கள்.



Scanned with CamScanner

10.12.2016 அன்று கோட்டார் ஆயூர் வேதா மருத்துவ கல்லூரி மாணவ மாணவிகள் சார்பில் பிளாஸ்டிக் மக், சோப், பேஸ்ட் மற்றும் மதிய உணவு கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 12-12-2016 அன்று திரு. வெங்கடேஸ்வரன் அவர்கள் சோப், பேஸ்ட், பிரஸ், பவுடர், எண்ணெய் மற்றும் இனிப்புகள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 20-12-2016 அன்று திருமதி. பிரேமா அவர்கள் 52 நிக்கர், T-சர்ட் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 23-12-2016 அன்று அன்னை தெரசா நான்காவது அன்பியம் கோட்டார் சார்பில் பிளாஸ்டிக் மக், வாளி, பாய், தோசைகல், டியூப் மற்றும் கப் ஆகியவை வாங்கி கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 24-12-2016 அன்று கோட்டார் சவேரியார் ஆலய பங்குதந்தை சார்பில் அரிசி, காய்கனி, பிஸ்கட் மற்றும் ஆடைகள் தந்து உதவி செய்துள்ளார்கள். 26-12-2016 அன்று அன்னை தெரசா சமூகநல இயக்கம் கார்மல் நகர் சர்ச் சார்பில் 30 பெட்சீட் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 27-12-2016 அன்று கார்மல் நகர் வெளிநாட்டு வாழ் தொழிலாளர்கள் சார்பில் 100கிலோ அரிசி கொடுத்து உதவி செய்துள்ளார்கள். 30-12-2016 அன்று திரு. சதீஷ் மோகன் அவர்கள் T-சர்ட்-52, சேலை-3 கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

மேற்படி நன்கொடையாளர்கள் அனைவருக்கும் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்குரிய ரசீது அனுப்பப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்.:**

07-01-2016 அன்று வடசேரியைச் சேர்ந்த திரு. கோபால் அவர்கள் 8 Shawl தந்து உதவி செய்தார்கள். 24-01-2016 அன்று மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த மகாவீர் Textiles உரிமையாளர் 8 நைட்டி, சர்ட்-1 தந்து உதவி செய்தார்கள். 30-01-2016 அன்று State Bank Colony-யைச் சேர்ந்த திரு. பிரான்சீஸ் அவர்கள் 10 கிலோ அரிசியும் 5 தேங்காயும் தந்து உதவி செய்தார்கள்.

24-05-2016 அன்று மேலப் பெருவிளையைச் சேர்ந்த திரு. பெலிக்ஸ் பிரபு அவர்கள் 18 Sarees, Blouse -18, Inskirts-18, Wheel Chair-1 ஆகிய பொருட்கள் தந்து உதவி செய்தார்கள்.

25-06-2016 அன்று இளங்கடையைச் சேர்ந்த திருமதி. லதா அவர்கள் Surf -1 Kg, Bath Soap-10, Washing Soap-25 ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.



Scanned with CamScanner

02-09-2016, 07-10-2016, 08-10-2016, 12-12-2016 ஆகிய தினங்களில் ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திருமதி. சபிதா ஆன்றோ அவர்கள் Surf- 2 கிலோ, Washing Soap -55, Bath Soap -18, Biscuit – 9 Pocket ஆகிய பொருட்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள். 04-09-2016 அன்று கல்குறிச்சியைச் சேர்ந்த திரு. வின்செண்ட் அவர்கள் 2 கிலோ Apple வாங்கி தந்து உதவி செய்தார்கள். 07-09-2016 அன்று கோட்டாரைச் சேர்ந்த திருமதி. வின்விஜிலா அவர்கள் Dettol -4 Bottle, Surf – 1 Kg, Sugar -3 Kg வாங்கி தந்து உதவி செய்தார்கள். 18-09-206 அன்று கோட்டாரைச் சேர்ந்த திருமதி. சொர்ணம் அவர்கள் 9 Nighties வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

24-09-2016, 11-11-2016 ஆகிய தினங்களில் Surf -5 கிலோ, Bath Soap-6, Washing Soap -20, Powder -1, Cake 1 Box, Biscuit -12 Pocket, Dettol -2 Bottle மற்றும் 20-12-2016 அன்று மளிகை பொருட்கள் Biscuit -2 Pocket ஆகிய பொருட்கள் கோட்டாரைச் சேர்ந்த திரு. மரியதாஸ் அவர்கள் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

19-10-2016 அன்று கோணத்தைச் சேர்ந்த திரு. கிரேசியஸ் அவர்கள் Biscuit -30 Pocket, Bath Soap -14, Shampoo 1 Bottle , Nighties -3 வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

08-11-2016 அன்று கோட்டாரைச் சேர்ந்த திரு. மிக்கேல் அவர்கள் 25கிலோ அரிசி வாங்கி தந்து உதவி செய்தார்கள். 09-11-2016 அன்று ஆசாரிபள்ளத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் அவர்கள் 17 Nighties வாங்கி தந்து உதவி செய்தார்கள். 22-11-2016 அன்று புன்னைநகரைச் சேர்ந்த திரு. மில்டர் தோமஸ் அவர்கள் 12 Bath Soap, Biscuit 6 Pocket வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

17-12-2016 அன்று Corpus Christi School 11th Std Students Beuro ஒன்று வாங்கி தந்து உதவி செய்தார்கள். 22-12-2016 அன்று Fr. குருசு கார்மல் அவர்கள் மளிகை பொருட்கள், Biscuit -2 Box, Sarees 2, சுடிதார் - 2 set வாங்கி தந்து உதவி செய்தார்கள். 28-12-2016 அன்று சேலத்தைச் சேர்ந்த திருமதி. ராணி ஜாண் அவர்கள் 15 Washing Soap, பழம் வாங்கி தந்து உதவி செய்தார்கள்.

மேற்படி நன்கொடையாளர்கள் அனைவருக்கும் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்குரிய ரசீது அனுப்பப்பட்டுள்ளது.



Scanned with CamScanner

9. **ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்:**

ஒவ்வொரு திட்டத்தின் பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் தங்கள் துறையின் கீழ் திட்டமிட்ட பணிகளை செய்து முடித்ததைப்பற்றி மதிப்பீடு செய்யவும் அடுத்த மாதம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடவும் பணிசெய்யும் போது ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் வேண்டி ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 11 ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

10. **கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்:**

"கார்டு" நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சிறப்பு பள்ளிகளை வாரம் ஒருமுறை சென்று பார்வையிடப்பட்டு பணிகளை முழுமையாக செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

11. **விடுதி பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்:**

திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளிக்கு இந்த ஆண்டு 02-03-2016 அன்று செல்வி. அமுதா என்ற மாணவியும், 15-04-2016 அன்று திருமதி. கிரேஸி என்பவரும், 01-05-2016 அன்று செல்வி. இந்திரா மேரி என்ற மாணவியும், 20-08-2016 அன்று திருமதி. காஞ்சனா என்ற ரெபேக்காள் என்பவரையும், 09-10-2016 அன்று செல்வி. சரஸ்வதி என்ற மாணவியும், 10-11-2016 அன்று செல்வி. சரஸ்வதி என்ற மாணவியும், நமது விடுதியில் சேர்க்கப்பட்டது.

"ஸ்பாஸ்டி" சிறப்பு பள்ளிக்கு செல்வன். செந்தில், செல்வன். ரிக்கு, செல்வன். கோபால், செல்வன். விக்னேஷ், செல்வன். பன்னீர் செல்வம், செல்வன். திருமலைகுமார், செல்வன். சுரேன் குமார் யாதவ், ஆகியோரை புதியதாக விடுதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

நல்ல சமாரியன் முதியோர் இல்லத்திற்கு 02-01-2016 அன்று திரு. சிவ சுப்பிரமணியன் அவர்களையும், 12-01-2016 அன்று திருமதி. அகஸ்டினாள் அவர்களையும், 18-02-2016 அன்று திரு. செல்வராஜ் அவர்களையும், 23-04-2016 அன்று திருமதி. சுப்பம்மா அவர்களையும், 23-06-2016 அன்று செல்வி. பார்வதி, செல்வி. ராமலெட்சுமி, செல்வி. அமுதா,



Scanned with CamScanner

திருமதி. கிரேசி ஆகியோரையும், 05-07-2016 அன்று திருமதி. சத்தியபாமா அவர்களையும், 03-09-2016 அன்று திருமதி. தங்கம்மா அவர்களையும், 20-12-2016 அன்று பார்வதிபுரத்தைச் சேர்ந்த திருமதி. கஸ்தூரி அவர்களையும் புதியதாக முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டது.

**12. மருத்துவ முகாம் நடத்துதல்:**

**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு பள்ளி:**

23-07-2016 அன்று காலை 11.30 மணிக்கு அரசு தோல் மருத்துவ குழுவினர் மருத்துவ முகாம் நமது சிறப்பு பள்ளியில் நடத்தினார்கள். அதில் செல்வி. தங்கம் பயனடைந்து வருகிறாள்.

12-10-2016 அன்று ஸ்பாஸ்டிக் சென்டர் ஆ∴ப் கன்னியாகுமரி புளியடி சென்டரில் Dr. நாகராஜன் அவர்கள் தலைமையில் M.R. மருத்துவ முகாம் நடைபெற்றது. அம்முகாமில் செல்வி. ஆவுடையம்மாள் என்ற மாணவியை அழைத்துச் செல்லப்பட்டு பயனடைந்து வருகிறாள்.

**ஸ்பாஸ்டி**

12-10-2016 அன்று Dr. நாகராஜன் அவர்களால் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மருந்து எழுதி கொடுத்தார்கள்.

30-07-2016 அன்று கோட்டார் அரசு மருத்துவமனை மருத்துவர்களால் தோல் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. தோல்நோய் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக மருந்துகள் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**நல்லசமாரியன் முதியோர் இல்லம்:**

அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை நமது முதியோர் இல்லத்திற்கு மிக அருகிலிருப்பதால் முதியோர்கள் ஒவ்வொருவருக்கும் மருத்துவ பரிசோதனைகள் தேவைப்படும் நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

**13. பொது நிகழ்ச்சிகளில் பிள்ளைகளை கலந்து கொள்ளச் செய்தல்:**

11-12-2016 அன்று ஹபிதாத் ∴பார் ஹீயூமானிட்டி சார்பில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டதில் நம்பள்ளி மாணவர்கள் கலை நிகழ்ச்சி கொடுத்து சிறப்பித்தார்கள்.



Scanned with CamScanner

14. நமது சிறப்பு பள்ளியை பார்வையிட வந்தவர்கள்:

**SPASTI:**

01-01-2016 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. தர்மராஜன் IPS அவர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

15-04-2016 அன்று கோட்டாறு மறைமாவட்ட அன்பிய ஒருங்கிணைப்பு குழு பார்வையிட வந்துள்ளார்கள்.

07-05-2016 அன்று கிறிஸ்துநகர் கிறிஸ்து அரசர் ஆலய VBS மாணவ, மாணவியர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

28-05-2016 அன்று பொழிக்கரை மரியாயின்சேனை உறுப்பினர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

08-07-2016 அன்று வடசேரி அன்பகம் சமூக நலக்குழுவினர் பார்வையிட வந்துள்ளார்கள்.

07-08-2016 அன்று கல்குறிச்சி புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் பார்வையிட வந்துள்ளார்கள்.

25-08-2016 அன்று பூத்துறை திருமுழுக்கு யோவான் சர்ச் மரியாயின் சேனை உறுப்பினர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

18-09-2016 அன்று இராமன்புதூர் அன்னை தெரசா சமூக நல இயக்க உறுப்பினர்கள் பார்வையிட வந்துள்ளார்கள்.

26-11-2016 அன்று முட்டைகாடு CSI சர்ச் பெண்கள் குழு பார்வையிட வந்துள்ளார்கள்.

10-12-2016 அன்று அரசு ஆயூர் வேதா கல்லூரி - கோட்டாறு மாணவ, மாணவிகள் பார்வையிட வந்துள்ளார்கள்.

**SMR:**

20-02-2016 அன்று தோவாளை லயோலா கல்லூரியின் Civil மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

21-02-2016 அன்று காட்டு விளை ஆலய நற்பணி மன்றம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

28-02-2016 அன்று ஆசாரிபள்ளம் புனித அந்தோணியார் நற்பணி மன்றம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.



Scanned with CamScanner

03-03-2016 அன்று பணகுடி Holy Family R.C Church சகோதரிகள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

04-03-2016 அன்று St. Xavier Church Kottar அன்பிய ஒருங்கிணையம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

06-03-2016 அன்று இயேசுவின் திரு இருதய ஆலய பக்த சபை ஒருங்கிணையம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

08-03-2016 அன்று புனித ஞானம்மாள் பெண்கள் அமைப்பு (வெள்ளியாவிளை) வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

15-03-2016 அன்று நாகர்கோவில் LIC of India Working women's Committe வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

14-04-2016 அன்று அமராவதிவிளை மரியாயின் சேனை மகிழ்ச்சியின் அரசி பிரசீடியம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

07-05-2016 அன்று வெட்டூர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலய விடுமுறை வேதாகம பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

07-08-2016 அன்று புனித சூசையப்பர் ஆலயம் கல்குறிச்சி புனித வின்சென்ட் தே பவுல் சபை வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

09-10-2016 அன்று திருமதி. சிபானா மற்றும் தொழுகை பள்ளி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

14-09-2016 அன்று Women's Rotary Club Nagercoil வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

12-10-2016 அன்று பிலாங்காலை அன்னை மரியாள் அன்பியம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

25-11-2016 அன்று ஆரல்வாய்மொழி CSI ஆலயம் பெண்கள் சங்கம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

26-11-2016 அன்று முட்டைக்காடு CSI ஆலயம் வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

27-11-2016 அன்று தோவாளை Grace of Christ Ministries Youth Follow Ship வாயிலாக நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

10-12-2016 அன்று அரசு ஆயுர்வேத கல்லூரி மாணவ, மாணவிகள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.



Scanned with CamScanner

19-12-2016 அன்று St. Ann's Met. Hr.Sec. School Panagudi ஆசிரியர்கள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

22-12-2016 அன்று Holy Cross கல்லூரியின் English Departments Students & Staffs, Maths Departments Students & Staffs, நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

25-12-2016 அன்று வீராணமங்கலம் பெனியேல் லூத்தரன் திருச்சபை ஓய்வு நாட் பாடசாலை மாணவ, மாணவிகள் நமது மாணவிகளை பார்வையிட வந்துள்ளார்கள்.

## 5. செய்து முடிக்காத பணிகள்:

1. ஊனமுற்றோர் புள்ளி விபரம் சேகரித்தல்:

இந்த ஆண்டு தேவைபடாததால் புள்ளி விவரம் சேகரிக்க செல்லவில்லை.

2. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்:

இவ்வாண்டு புதிய பணியாளர்கள் பணியமர்த்தப்படாததால் புதிய பணியாளர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படவில்லை. பணியாளர்களுக்கு பணியிடைப்பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

3. பிறநிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க பயிற்சி பெற செல்லுதல்:

பிற நிறுவனங்களிலிருந்து அழைப்புகள் வராததால் பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க பயிற்சி பெறசெல்லவில்லை.

4. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் கொடுத்தல்

புதிய உபகரணங்கள் கேட்டு வராததால் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்ட உபகரணங்கள் பழுது நீக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

## 6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:

திட்ட இயக்குனர், சிறப்புக்கல்வி ஆசிரியர்கள், முடநீக்கு பணியாளர்கள், உதவியாளர்கள், விடுதி பணியாளர்கள், நிர்வாக பணியாளர்கள் ஆகியோர்கள் உதவியாக இருந்தார்கள்.



Scanned with CamScanner

7. எதிர்கால திட்டங்கள்:

1. ஊனமுற்றோர், ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களை சந்தித்தல்.
2. ஊனமுற்றோர் புள்ளி விபரம் சேகரித்தல்.
3. பெற்றோர் சங்க கூட்டம் நடத்துதல்.
4. சிறப்புக்கல்வி கொடுத்தல்.
5. பணியாளர் கூட்டம் நடத்துதல்.
6. பணிமதிப்பீடு நடத்துதல்.
7. விழாக்கள் கொண்டாடுதல்.
8. செய்முறை பயிற்சி கொடுத்தல்.
9. நன்கொடை வசூலித்தல்.
10. ஒருங்கிணைப்பாளர் கூட்டம் நடத்துதல்.
11. பிள்ளைகளை சுற்றுலா அழைத்துச்செல்லுதல்.
12. பிறதுறை கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
13. கிளை நிறுவனங்களை பார்வையிடுதல்.
14. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்.
15. ஊனமுற்றோருக்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல்.
16. மருத்துவ முகாம் நடத்துதல்.
17. பிற நிறுவனங்களுக்கு பயிற்சி கொடுக்க பயிற்சி பெற செல்லுதல்
18. பள்ளி, விடுதி பிள்ளைகள் மற்றும் முதியோர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

திருப்பதிசாரம்,

29-07-2017.

R. victoris.
திட்ட அலுவலர்.
MISS. R. VICTORIA
PROJECT OFFICER
KARD
THIRUPATHISARAM P.O.
K.K.DIST.

திட்ட இயக்குனர்.
Dr. S. Basil Rajan, M.A., Ph.D.,
PROJECT DIRECTOR,
KARD
THIRUPATHISARAM & P.O.,-629001.
KANYAKUMARI DISTRICT.



Scanned with CamScanner